# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.8/2023

### அ.சா. 13 (LW 13 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ஜெயசீலன் | **தொழில்** | |
| **த/க பெயர்** | மோசஸ் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **22.09.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1,2 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கொடைரோடு ,கரிகாலன்பட்டியல் குடியிருந்து வருகிறேன். தனியார் ஆம்புலன்ஸ் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 20.06.2022 அன்று தனியார் ஆம்புலன்ஸ் டிரைவராக பணியிலிருந்த போது மாலை 05.00 மணி அளவில் ராஜதானிக்கோட்டைக்கு அழைப்பை ஏற்று நான் அங்கே சென்றேன். அப்போது காயம்பட்டு கிடந்த ராஜ்குமார் என்பவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தேன். நான் அழைத்துச் செல்லும்போது அவர் உயிருடன் இருந்தார். நான் இறக்கி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது மருத்துவர் அவரை பரிசோதித்து பார்த்து விட்டு அவர் இறந்து விட்டதாக கூறினார். ஆம்புலன்சின் பதிவு எண். TN 57 AM 2894 ஆகும் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அம்மையநாயக்கனூர் போலிசார் எனக்கு தகவல் சொன்னதன் அடிப்படையில் நான் என் ஆம்புலன்சை எடுத்துக் கொண்டு ராஜதானிக்கோட்டைக்கு சென்றேன். என் ஆம்புலன்சுக்கு ட்ரிப் சீட் உள்ளது. போலிசார் விசாரணையின் போது அந்த ட்ரிப் சீட்டை வாங்கி பார்க்கவில்லை. நான் கொடைரோட்டில் மேற்படி ஆம்புலன்சை நிறுத்தி

வைத்திருந்த போதுதான் போலிசார் என்ககு தகவல் சொன்னார்கள். அந்தட்ரிப் சீட்டை பார்த்தால் எத்தனை மணிக்கு ஆம்புலன்சை நான் சொன்ன காரணத்திற்காக பயன்படுத்தினேன் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். என்னுடைய ஆம்புலன்சில் இரத்தக்கரை இருந்ததாக போலிசார் பார்க்கவில்லை. நான் சொன்னதுபோல், சொன்ன நேரத்தில் என் ஆம்புலன்சை எடுத்து செல்லவில்லை என்றாலும் போலிசார் சொன்னததின் பேரில் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் ஆம்புலன்சை எடுத்துச் சென்றதாக போலிசார் சொல்லி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.22 19:43:00 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.